# பெண்மொழி

இதழ்1 நாள் 08.03.2022

இலண்டன் தமிழ் பெண்கள் அமைப்பு
London Tamil Women Organization

**ஓங்கின கைகள் உயர்ந்தன கைகள் ஒப்பில்லாத் தேடலில் ஒளிர்ந்தன கைகள்**

## மன்றக் கீதம்

**வாழிய இலண்டன் தமிழ்ப்பெண்கள் அமைப்பு
வாழிய வாழிய பெண்களின் இருப்பு
வாழிய சகியே வையகம் போற்ற
வாழிய வாழிய வாழ்க பல்லாண்டு**

**சரணங்கள்**

**ஓங்கின கைகள் உயர்ந்தன கைகள்
ஒப்பில்லாத் தேடலில் ஒளிர்ந்தன கைகள்
தாங்கிடும் துணையாய் துணிவுறு மனமாய்
தன்நிகர் அழகைத் தந்திடும் வாரீர்!**

**-வாழிய இலண்டன்**

**ஈடில்லாப் பயணம் ஏற்றுமே வந்தோம்
இலண்டன் தமிழ்ப்பெண்கள் இனிதெனக் கொண்டோம்
காதலைக் களிப்பினை கண்களில் வைத்தோம்
கௌரவ வாழ்வினால் மகிழ்வினைப் பெற்றோம்**

**-வாழிய இலண்டன்**

**அகிலத்தை ஆள அனைவரும் இணைக!
ஆளுமை மகளிர் அன்புடன் வருக!
சகலதும் கற்போம் சரித்திர மாவோம்
தரணியில் என்றும் நிமிர்ந்துமே நிற்போம்!**

## தடைகளைத் தகர்த்தே இணைந்து பயணிப்போம்



உலகெங்கும் வாழ்கின்ற பெண்கள் , இன்று தங்கள் வாழ்வைத் தக்க வைத்திருப்பதற்காகப் பல தடைகள் தாண்டிப் பயணிக்கின்றார்கள். இந்நிலைமை முனைப்புப் பெறவும், தற்போது இருக்கின்ற ஒடுக்குதல்களை ஓரங்கட்டவும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

முன்னோக்கிச் செல்லும் எம் சிந்தனைகளில் பாலின சமத்துவம் முக்கிய இடம் பிடித்தாக வேண்டும். பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், வேலைத்தலங்களில், பொதுவிடங்களில் இந்நிலைமை பேணுதல் முக்கியமாகின்றது. இது வலியுறுத்தப்பட்டு நடைமுறையில் கொண்டு வரப்படுமானால் பெண்கள் தங்களது சமூக அங்கீகாரத்தை மனமகிழ்வுடன் அனுபவிப்பதுடன் இன்னும் தம் திறமைகளை எவ்விடத்திலும் கொடுப்பதற்குத் தயாராவார்.

மற்றவர்கள் உணர்வுகளை மதிக்கவும் குழுவாக இணைந்து வேலைத்திட்டங்களில் ஈடுபடவும் பயனற்றவற்றைத் தவிர்க்கவும் பழகுவோமானால் எமக்கான உன்னதங்கள் நோக்கி அனைத்துப் பெண்களும் முன்னேற முடியும்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய தனித்துவத்தை, ஆளுமையை அடையாளப்படுத்துகின்ற அதேவேளை சமூகத்தில் அவளுக்கான உரிமைகள், மதிப்புகள் கவனத்தில் கொள்ளப்படுவதை அவதானித்தல் வேண்டும். உள்ளத்தாலும் உடலாலும் அவள் துன்புறுத்தப்படுவதும் நீங்குமானால் நல்லதொரு உலகை உருவாக்க வழி சமைக்கலாம்.

நாடுகளின் தட்ப வெப்பங்களுக்கும், பண்பாடு கலாசாரங்களுக்கும் அரசியல் அனர்த்தங்களுக்குமேற்ப பெண்களின் வாழ்வு மாறிக்கிடக்கின்றது. அவற்றுக்கு அப்பால் அவளது வெளி, ஒளி பெற உழைத்திடுவோம்.

**மகளிர்தின வாழ்த்துக்கள்**

மாதவி சிவலீலன்
தலைவி, இலண்டன் தமிழ் பெண்கள் அமைப்பு

## குறிக்கோள்கள்

- இலண்டனில் வசிக்கின்ற அல்லது வேலை செய்கின்ற தமிழ்ப் பெண்களை ஒருங்கிணைத்துப் பயணிப்பது.
- ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்து அவர்களைச் சமூக ஒருங்கிணைப்பு சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுத்துவது
- அமைப்பாக இருந்து உதவி தேவைப்படும் பெண்களுக்கு ஆதரவாக இருப்பது.

# குதியுயர் காலணிகளை அணிந்த பெண்ணொருத்தி

குதி உயர்ந்த காலணிகளை
அணிந்த பெண்ணொருத்தி
பின்மாலைப் பொழுதொன்றில்,
காலணிகளைக் கழற்றித்
தன்வீட்டு வாசலில் பதிகிறாள்.
ஆடை மாற்றிய பின்,
காலையில் கழற்றி விட்டிருந்த
அதிவேகச் சக்கரங்களை
அணிந்து கொள்கிறாள்.
அவசர இரவுணவு
இடியப்பச் சிக்கல்
மரபுணவிலிருந்து மாற முடியாத
வயோதிபப் பெற்றோரின் தேவை.
பள்ளியில் இருந்தும்
அலுவலகத்திலிருந்தும் வருபவர்களை
''களைச்சுப் போச்சுதுகள்''
முதிய குரல்கள் வரவேற்கின்றன.
அவர்கள் ஓய்வுறுகிறார்கள்.
அவளோ
ஐந்தாவது தடவையாக
சூடாக்கிய தேநீரை
நடந்தபடியே குடிக்கிறாள்.
தொடர் கடமைகளும் கூடவே
அவளுடன் நடக்கின்றன.
பள்ளிக்கடிதங்கள், வீட்டுப்பாட உதவி
உடை கழுவுதல், மினுக்குதல், மடித்தல்
இரவு உணவு, சமையலறைச் சுத்தம் என
ஒரு வேலை முடிய
மறு வேலை முளைக்கும்
ஒரு வினோத விளையாட்டு
ஆடித்தான் ஆக வேண்டும்.
அந்தி மாலையாகி,
மாலை இரவாகி,
இரவு நடுநிசியைத் தழுவத் துடிக்கையில்,
அருகில் படுப்பவன்
அருந்தப் பானமாகிறாள்.
களைத்துக் கவியும்
விழியிமைகள் மீது
உருகும் மெழுகுவர்த்தியாய் உகிர்கின்றன.
நாளைய நாளின் கடமை
அவை ஒன்றின் மீதொன்று விழுந்து
கட்டிடமாகிக் கனக்கின்றன.
மாலை அணியப்பட்ட
பலியாடுகளாக அவளது நாட்கள்.
ஒன்று வெட்டப்பட
மற்றையது முன் நகர்கிறது
இருள் சூழ் உலகு.
மறுநாள் மலர
கட்டிலடியில் காத்திருக்கும்
சக்கரங்களைக் கொளுவி
காலைக்கெனப் பட்டியலிடப்பட்ட
கடமைகளை முடிக்கிறாள்.
அவசர முகஒப்பனை.
''கொன்சீலருக்கு'' ஒரு முத்தம்.
வாய்த்தர்க்கம்
தவிர்க்கவே முடியாத பொழுதுகளில்,
வேகமாய் பதியும்
கைவிரல் அடையாளங்களை
கெட்டித்தனமாய் மறைத்து விடும்
வித்தை அறிந்த தோழி.
இதழ்க்கடையில் வழியும் கழிவிரக்கத்தை
உதட்டுப் பூச்சில் மறைக்கிறாள்.
வேலைக்குக் கிளம்பி விட்டாள்.
முன்வாசலில் சரிந்து கிடக்கின்றன.
அவளது குதியுயர் கலணிகள்
எதேச்சையாக,
அவன் கழற்றி வீசிய சப்பாத்துக்கள்
அவற்றைச் சரித்திருக்க வேண்டும்.
மெல்ல நிமிர்த்தி மேலுயர்கிறாள்.
வீட்டின் வெளிப்புறமாகி,
அறைந்து சாத்துகிறாள் கதவை
ஏதோ நிம்மதி
மௌனமாக நடக்கிறாள்
உள்ளே சுழல்காற்று இரையும்
ஒரு பெரும் பிரளயம்
சூழ் கொண்டிருப்பினும் கூட.....

**குணாளினி தயாநந்தன்**
**(சாரங்கா)**



# ஒளி தேடி......

நிலவை தொலைத்துவிட்ட வானம். நட்சத்திரங்களுக்கு இன்று விடுமுறை. இருள் படிந்த நட்டநடு நிசியில் ,தூறும் பனிமழையில், நடு நடுங்கும் குளிரில், நடைபாதை நடுவே, நான் தனியாக நடக்கிறேன். நம்பவே முடியவில்லை

நான் நான்...... நான் மட்டும் தனியாக நடக்கிறேன்.

என்னை கடந்து போகும் முகம் தெரியாத மனிதர்கள் நினைவுகள் பின்னோக்கி போகின்றன எனது கடந்த கால வாழ்வு

என் தேசத்தில் இருட்டி விட்டாலே ஒரு பயம். வெளியே விடாத பெற்றோர்கள். இருட்டு பயம் ஒருபுறம்,என்றால் பெண்பிள்ளை வெளியே இருட்டில் செல்லாதே என்ற அறிவுறுத்தல் மறுபுறம். இருட்டில் தெரு நாய்களுக்குப் பயப்படும் நான் நான்........நான் இன்று தனியாக நடக்கிறேன்.

மொழி தெரியாத தேசத்தில் யார் எவரோ சாப்பிட்ட எச்சில் கோப்பையை கழுவி சுத்தம் பண்ணி விட்டு நடுநிசியில் தனியாக நடக்கிறேன் நான் நான்

வெளிநாட்டில் வாழ்வு வேணும் என்ற வீராப்புடன் உள்ளூரில்

என்னை விரும்பிக் கேட்ட இரண்டு ஏக்கர் வயல் சொந்தக்காரர் வைரத்தை விட்டுவிட்டு வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு விருந்தாய் போய்விட்டேன். விவசாயமும் இழிவெனவும் வெளிநாடு தரமெனவும்...

தங்கைக்கும் சொல்லிவிட்டேன் சொர்க்கமானது நம்தேசத்து வாழ்வுதான் என்று.....

வந்ததும் வயிற்றில் பிள்ளை . மொழி தெரியாத தேசத்தில் முடங்கி விட்டேன் வீட்டினுள். நாட்களும் பறந்தன. பிள்ளையும் கதைக்கத் தொடங்கி விட்டாள். இனியும் விவரம் தெரியாமல் வீட்டினுள் அடைபடாமல் அவளுடன் சேர்ந்து நானும் இந்நாட்டு மொழியை படிப்பதற்கு வீதிக்கு இறங்கி விட்டேன்.



அடிக்கடி எனது நினைவில் வந்து போகும் அம்மா அப்பாவுக்கும் என் விதவை நண்பிகளுக்காகவும் என் தன்மான உணர்வுடன் உழைப்பதற்கு புறப்பட்டு விட்டேன்.

பனிப்புயலில் நடக்கிறேன் எல்லாம் பழகி விட்டது எனக்கு. இப்போ தான் தெரிகிறது நான் எனக்குள் இருந்த பயத்தை தொலைத்து விட்டேன் என்று

இந்த இருளிலும் ஒற்றை நட்சத்திரம் ஒன்று மட்டும் அடிவானில் கண்சிமிட்டி எனக்கு ஒரு நம்பிக்கை ஒளியை தருகிறது.

**லக்ஷ்மி சிவாகுமார்**

# பெண் இன்றி அணுவும் அசையாது!

மானுடம் என்பது அபூர்வமானதொரு படைப்பாகவே இப் பிரபஞ்சத்தில் வெளிப்பட்டிருக்கிறது.

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதிலும் கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது.'

குழந்தையை ஈன்றெடுத்து இவ் உலகுக்கு அளித்திடும் மகத்தான செயலுக்கு பெண்ணின் கருவறையே பாக்கியம் பெற்றிருக்கிறது.

அதிசயமான விடயம் இது. இதனை விட பெண்ணின் உயர்நிலையை பறை சாற்றுவதற்கு வேறு உதாரணங்கள் இருக்கவே முடியாது.

பரிணாம வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் உறுதுணையாக இருப்பவள் பெண் என்றால் அது மிகையாகாது.

குழந்தை முதல் பெரியோர் வரை ஒரு பெண் பொழியும் அன்புக்கு ஈடு இணையாக எதையும் ஒப்பிடமுடியாது.

அவள் பெற்றெடுக்கும் குழந்தைக்கு தன் உதிரத்தை பாலாக கனிவுடன் ஊட்டும் கற்பகதருவாகிறாள்.

அன்பின் பாசத்தின் உயர் வடிவினை அங்கு தொட்டு நிற்கிறாள்

தன் குழந்தை வளர்ந்து வரும் பொழுது நேரம் தவறாது உணவூட்டி மகிழ்வாள் அன்னை.

ஊண், உறக்கம், சுயதேவைகள் அனைத்தையும் துறந்து தன் குடும்பத்திற்காக உழைத்து உயர்ந்து நிற்பவள் பெண்.

நல்லொழுக்கத்துடன் அன்னையால் வளர்க்கப்படும் பிள்ளைகள், சமூகத்தில் நற்பிரஜையாக பிரகாசிக்கிறார்கள்.

ஒரு குடும்பபெண்ணாக மட்டுமல்ல , சமூகத்திலும் அவள் பங்கு உச்சத்தை தொட்டு நிற்கிறது எனலாம்.

மற்றவர்களுக்கு சமமாக கல்வி கற்று, உயர்பதவிகள் வகித்து, தொழில்சார் நிறுவனங்களை நிர்வகித்து ,பல்வேறு துறைகளிலும் உச்சத்தை தொட்டவர்கள் பெண்கள். விண்வெளிக்கே சென்று சாதனை படைத்து பெருமை தந்தவளும் அவளே.

மாதர்களால் செய்ய முடியாத காரியங்கள் எதுவுமில்லை.

பெண்ணின் மகத்துவத்தை தனது படைப்புகளின் ஊடாக உலகறியச் செய்தவர் மகாகவி பாரதியார்.

பல மகான்கள், கவிஞர்கள், படைப்பாளிகள் பெண்ணை ஒரு பிரபஞ்ச சக்தியாய் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

'அன்பின் வடிவம் பெண். பாசத்தின் பிறப்பிடம் பெண். பொறுமையின் சிகரம் பெண். விருந்தோம்பலின் சக்தி பெண்'.

இயல்பாகப் பொருந்திய இந் நற்குணங்கள், மனித குலத்திற்கு கிடைத்த வரம்.

மாதர் தமைப்போற்றுவோம்.

மாதர் தமை இழிவு செய்யும்

மடைமையைக் கொளுத்துவோம்.

அவர்களின் பேராளுமையை வளர்ப்போம்...வாழ்த்துவோம்!.

**ராதா நவநீதநாதன்**



# பெண்கள் தின வரலாறு

மங்கையராய் பிறந்திட மாதவம் செய்திட வேண்டும் என்பதை மெய்யாக்கிக் கொண்டிருக்கும் பெண்கள் அனைவருக்கும் என் பெண்கள் தினவாழ்த்துகள்.

சமூகம், அரசியல், பொருளியல், விஞ்ஞானம், கலை போன்ற துறைகளில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கொண்டாடுவதற்கான நாளாக இந்த நாள் உருவு எடுத்துள்ளது. ஆனால் பாலின பாகுபாட்டை எதிர்த்து உழைக்கும் பெண்கள் நடத்திய போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தான் இந்த நாளின் வரலாற்றின் ஆரம்பம். இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சர்வதேசப் பெண்கள் தினம் ஒரு போராட்டத்தில் தான் தொடங்கியதொன்றாகும்.

வேலை நேரத்தைக் குறைக்கவும் கூலியை உயர்த்தவும் வலியுறுத்தி, வாக்களிக்கும் உரிமை கோரி 15000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1908ம் ஆண்டு மார்ச் 8ம் தேதி ஒரு பேரணியை நடத்தினர். இந்த நாளை 1909ல் அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சி தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது.

கிளரா ஜெட்கின், இந்த நாளை சர்வதேச தினமாக அனுசரிக்க வேண்டும் என்ற யோசனையை கோபன்ஹேகனில் 1910ல். நடந்த உழைக்கும் பெண்களின் சர்வதேச மாநாட்டில் முன் வைத்தார். அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்து கொண்டனர். கிளரா ஒரு சர்வதேச பெண்கள் தினம் வேண்டும் என்ற யோசனையை முன் மொழிந்தபோது எந்த நாளில் கொண்டாட வேண்டும் என்று தேதி குறிப்பிடவில்லை



இதை அடுத்து 1911ம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. எனவே அந்த வகையில் 2022ம் ஆண்டு 111வது பெண்கள் தினமாகும்.

***கௌரி சிறீனாதன்***

முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது 1917ம் ஆண்டு ரஷ்யாவில் போர் வேண்டாம், "அமைதியும் ரொட்டியும்" தான் தேவை என்று வலியுறுத்தி மார்ச் 8ம் திகதி பெண்கள் போராட்டத்தைத் தொடங்கினர். நான்கு நாட்கள் நடந்த இந்தப் போராட்டம், சர்வதேச மகளிர் தினம் என்ற கருத்துக்கு உறுதியான ஒரு வடிவத்தைக் கொடுத்தது. நான்கு நாட்கள் நீடித்த இந்தப் போராட்டம் கடைசியில் ரஷ்ய முடிமன்னரான **ஜார்** அரியணையை விட்டிறங்குவதற்கான அழுத்தத்தை தந்தது. முடியாட்சியும் முடிவுக்கு வந்தது. முடியாட்சிக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தற்காலிக அரசாங்கம் பெண்களுக்கு வாக்குரிமையும் அளித்தது.

அக்டோபரில் நடந்த புகழ் பெற்ற ரஷ்ய புரட்சிக்கும், அதன் விளைவாக உலகெங்கும்சோஷலிஸ்ட் அரசுகள் தோன்றுவதற்கும் முன்னோட்டமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மாற்றம் தான், 1917

சர்வதேசப் பெண்கள் தினம் ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளில் தேசிய விடுமுறை நாளாக உள்ளது. இந்த நாடுகளில் இத்தினத்தில் மூன்று நான்கு நாட்களுக்குப் பூக்கள் விற்பனை இருமடங்காகிறது. சீனாவில் அரசு கவுன்சில் அளித்த அறிவுரைப்படி பல இடங்களில் மார்ச் 8 அன்று பெண் ஊழியர்களுக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்படுகிறது. இத்தாலியில் இத்தினத்தில் மிமோச பூக்களை வழங்கும் வழக்கம் உள்ளது. அமெரிக்காவில் மார்ச் மாதம் பெண்கள் வரலாற்று மாதமாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்க அதிபர் பெண்களுக்கான ஒரு பிரகடனத்தை வெளியிடுகிறார். கடந்த ஆண்டு 2021ல் **"சவாலைத் தேர்வு செய்யுங்கள்"** என்பதனைக் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டது.

எனினும் இந்த 21ம் நூற்றாண்டிலும் கூட பெண்ணடிமைத்தனம் வீடு, அலுவலகம் என்பவற்றில் தொடர்கிறதென்பது வருத்தத்திற்குரியதாகும்.

**பெண்ணே நீ**


**உனக்கென்று**

**வாழ்வது எப்போது?**

**உண்மையான மாற்றம் வரும் அப்போது.**




13.03.2017 அன்று Rising Sun உணவகத்தில் ஹரோ சந்தி அமைப்பினர், மகளிர் தினம் பற்றிய உரையாடல் நிகழ்வை நடத்தியிருந்தனர். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாதவி, நவஜோதி, நிலா ஆகியோர் மீனாளையும் இணைத்து அடுத்த வருடம் மகளிர் தினம் ஒன்றைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து ஆரம்பிக்கப்பட்டதே இலண்டன் தமிழ் பெண்கள் அமைப்பு. இதனது உத்தியோகபூர்வமான முதலாவது கூட்டம் London Tamil Centre, 253 East Lane, Wembly யில் 03.06.2017 அன்று நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட புகைப்படமே இதுவாகும்.



# அனலிடை மெழுகல்ல

ஓவியம்: துகிதா மகேஸ்வரன்

## மனக்கிடக்கை


**கங்காதேவி குமரலிங்கம்**













# புலம்பெயர்ந்தோர் பிள்ளைகளின் திருமணங்களும் பெற்றோரும்

இருபதாம் நூற்றாண்டின் பின்னர் அரச அடக்குமுறை மற்றும் போர் காரணமாகத் தமிழர்கள் தாயகத்திலிருந்து புலம்பெயரத் தொடங்கி நாற்பது ஆண்டுகள் ஆகப்போகின்றன. இந்தியாவில் ஆரம்பித்து ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மட்டுமல்ல உலகின் பல்வேறுநாடுகளிலும் காலூன்றி வாழ்ந்துகொண்டிருக்கிறான் தமிழன்.

எண்பதுகளின் பின்னர் இளவயதினாராக பதின்ம வயதுகளில் பெற்றோருடனோ அன்றித் தனியாகவோ இடம்பெயர்ந்த தமிழர்கள், கல்வி அறிவில் மேலோங்கிப் பணபலத்துடன் வாழ்ந்தாலும் கூட, திருமணம் என்று வரும்போது தங்கள் பண்பாட்டு விழுமியங்களுடன் பின்னிப்பிணையப்பட்டு அதிலிருந்து மீள மனம் இருந்தாலும் தம் உறவுகளுக்கோ சமூகத்துக்கோ அஞ்சி தொடர்ந்தும் அதைப் பேணியபடியே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்..

ஒருசிலர் வதிவிட உரிமைகளுக்காக அவற்றைக் கண்டும் காணாததுபோலவோ அல்லது வேறு வழியின்றியோ அவற்றைக் கடந்து சென்று எவ்வித அடையாளங்களும் இன்றி வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளும் இலகுவாக புலம்பெயர் நாட்டுக் கலாசாரத்துக்குள் தம்மை அமிழ்த்தியபடி மகிழ்வாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

தம் பண்பாட்டு அடையாளங்களை இழக்காது வாழவேண்டும் என்று எண்ணும் தரப்பினரிலும் பலவிதமான இளகல் தன்மை கொண்டவர்கள் இருக்கவே செய்கிறார்கள். சாதி, மதம் என்பவற்றைப் பெரிதாக எண்ணாது கல்விக்கு முன்னுரிமை கொடுத்து தம் பிள்ளைகளில் வாழ்வைத் தீர்மானிப்பவர்களும் காதல் மணம் புரிபவர்களுமாக ஒரு பகுதியினர் வாழ்ந்துகொண்டு இருக்க, தேவையற்றவற்றைத் தூக்கிப் பிடித்தபடி தம் பிள்ளைகளைத் தம்முடனே முதிர் கன்னியாகவும் முதிர் காளையாகவும் வைத்திருப்போர் பலர்.

பல பெற்றோர் இன்னும் சாதகம் பார்ப்பதிலும் மூன்றாவது ஒரு நபரின் கூற்றை நம்பிப் பிள்ளைகளின் வாழ்வைத் தீர்மானிப்பவர்களாகவும் இருக்கின்றனர். அறிவியலில் இத்தனை பாரிய வளர்ச்சி ஏற்பட்ட பின்னரும். கூடக் குறிப்புப் பார்ப்பதற்கு என்றே பலர் நிறையப் பணத்தை விரயம் செய்துகொண்டிருக்கின்றனர்.

"தமிழர் திருமண சேவைகள்" என்பவற்றுக்கு அதிக பணங்களைச் செலுத்தி விளம்பரப்படுத்துவதும் அதனூடாக மணமகனையோ மணமகளையோ தெரிவுசெய்து பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைப்பதும் நடந்தாலும் கூட அங்கும் மணமுறிவுகளும் நடந்தேறுகின்றன. காதல் மணம் செய்துகொண்டவர்களிடையே கூட ஆணாதிக்க சிந்தனையின்பால் ஏற்படும் முரண்பாடுகளாலேயே பிளவுகளும் ஏற்பட்டுப்போகின்றன.

நிவேதா உதயராஜன்

புலம்பெயர் பெற்றோரின் பிள்ளைகளில் முப்பதிலிருந்து முப்பத்தைந்தைக் கடந்தும் திருமணமாகாது வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலர். இதில் பலருக்குத் தடையாக இருப்பது தாய்மாரே. தன் மகனுக்குப் பெண் பார்க்கும்போது பெண்ணின் படத்தைப் பார்த்து, மகனுக்குப் படத்தையே காட்டாது பெண்ணையும் ஒரு தடவைகூட நேரில் பார்க்காமலேயே "தன் மகனுக்கு ஏற்ற பெண் இல்லை" என்று முடிவெடுத்து "மகனுக்குப் பிடிக்கவில்லை" என்று கூறித் தட்டிக்கழிக்கும் பாரிய தவறை இன்றுவரை அவர்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

திருமணப் பேச்சு ஆரம்பிக்கும்போதே "உங்கள் மகள் அணியும் ஆடையின் அளவு என்ன" என்றபடியே பல திருமணப் பேச்சுக்கள் ஆரம்பிக்கின்றன. ஒரு பெண் அழகாக இருந்தால் மட்டும் போதுமானது என்பதும் அவர் சிறிது உடல்பருமான உள்ளவர் என்பதற்காக நிராகரிப்பதும் எத்தனை தவறான அணுகுமுறை என்பதை அவர்கள் உணர்வதில்லை. கொடியிடையாளாக இருக்கும் பெண் திருமணத்தின் பின்னர் குழந்தை பெற்று உடல்பருமன் கொண்டவராக மாறினால் மருமகளை வேண்டாம் என்றா சொல்வீர்கள் அல்லது விவாகரத்துச் செய்வீர்களா?? எனறு கேட்கிறேன். அழகாக இருக்கும் பெண் குடும்பம் நடத்தத் தெரியாதவராக ஆணின் பெற்றோரை மதிக்காதவராக, சமைக்கவே தெரியாதவராகவோ வந்தால் தங்கள் நிலை என்ன என்பதை சிறிதும் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் உடல் பருமன் கொண்டவர்களாகவே அதிக பெண்கள் இருந்தார்கள் என்றும், அவர்களையே பலரும் விரும்பி மணந்தனர் என்றும், பிள்ளைப்பேற்றின்போது உடவாகு அதிகம் உள்ளவர்களே இலகுவாகப் பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியும் என்றும் அப்படித் திடகாத்திரமானவர்களே பல வேலைகளை இலகுவாகச் செய்யக்கூடியவர்கள் என்னும் நம்பிக்கை ஆண்களுக்கு இருந்ததாகவும் நம்பப்பட்டது. ஆரம்பகாலத் திரைப்படங்களை எடுத்துக்கொண்டாலும் கூட பல கதாநாயகிகள் கொழுகொழுவென்றே இருந்தனர். இருபதாம், இருப்பத்தோராம் நூற்றாண்டிலேயே மெல்லிய உடல்வாகு கொண்டவர்களே அழகானவர்கள் என்னும் பிம்பம் திரைப்படங்களிலும் விளம்பரங்களிலும் காட்டப்பட்டது. அவற்றில் காட்டப்படும் பெண்களைப் போன்றே தமக்கும் மனைவியோ மருமகளோ வரவேண்டும் என்றும் ஆசை பலருக்கும் ஏற்பட்டுப் போனது. யதார்த்த வாழ்வுக்கு அவை ஏற்றவை அல்ல என்று புரிந்துகொள்ள முடியாதவாறு பல்லூடகங்களும் தொழில் நுட்ப வளர்ச்சிகளும் பலவகையான விளம்பரங்களைக் காட்சிப்படுத்திக்கொண்டே மக்கள் மனங்களை அவர்களை அறியாமலே மழுங்கடித்துக் கொண்டிருக்கின்றன.



பல குடும்பங்களில் இன்றும் தமது ஆண் பிள்ளைகளை, ஊரில் பெண் பிள்ளைகளை பொத்திப் பொத்தி வளர்ப்பதுபோல் வளர்த்து அவர்களைத் தன்னம்பிக்கை அற்றவர்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் ஆக்கியும் வைத்து விடுகின்றனர். தமக்கென்றொரு சுயசிந்தனை அற்றவர்களாக அந்த ஆண்கள் வளர்க்கின்றபோது தனக்கு வரப்போகும் பெண்ணைக் கூடத் தான் தெரிவு செய்யவேண்டும் என்னும் விடயமே தெரியாதவர்களாக அல்லது தாயின் மனம் துன்பப்படக் கூடாது என்னும் நோக்கமே முதன்மையாகக் கொண்டவர்களாவும் அவர்கள் இருப்பது தாயின் வளர்ப்பினாலேதான். இப்படியானவர்களுடனான திருமணப்பேச்சுகளில் ஏற்பட்ட வெறுப்பினால் "மம்மீஸ் டோல்" என்ற பட்டப் பெயரைக் கூட அப்படியான ஆண் பிள்ளைகளுக்கு வைத்துள்ளனர் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

**உறுப்பினராக இணைய...**

மாதம் £1.00 செலுத்துவதன் மூலம் வருடத்துக்கு £12.00 செலுத்தலாம். £150.00 செலுத்தி ஆயுட்கால உறுப்பினராகலாம்.

அதிகமான பெண்பிள்ளைகள் ஆண்களிலும் பார்க்கக் கல்வி கற்று நல்ல வேலைகளிலும் இருப்பதனால் கல்வித் தரத்தில் அவர்களுக்கு ஈடான மணமகனையே அவர்கள்

எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தாம் வசதியாக வாழ்வதற்கான பணபலத்துடன் அந்த ஆண் இருக்கின்றாரா என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். முக்கியமாக புலம்பெயர்ந்த வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றதுபோல் குடும்பச் சுமையையும் வீட்டு வேலைகளையுமே அதாவது சமையல், துவைத்தல், வீட்டச் சுத்தம் செய்தல் போன்றவற்றையும் தமக்கு சமமாக ஆண்கள் செய்யவேண்டும் என்பதும் அவர்கள் விருப்பாக இருக்கின்றது.

ஆனால் ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் தம் மகனுக்கு வரும் பெண் நன்கு படித்தவளாக, சொந்த வீடு அல்லது பெற்றவராவது சொந்த வீட்டுடன் வசதியானவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். தாம் எதுவும் இல்லாது புலம் பெயர்ந்து வந்து எத்தனை துன்பங்களைக் கடந்து வந்தோம் என்பதையோ தம்மைப் போலத்தானே பெண்ணைப் பெற்றவர்களும் கடும் முயற்சியில் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னேற்றியுள்ளனர் என்பதையோ அன்றி பெண்ணின் கல்வியறிவையோ, அவர்களும் தம் பிள்ளையைப் போலவே பணமீட்டுகின்றனர் என்பதையோ எண்ணிப் பார்ப்பதில்லை.

முக்கியமாகத் தம் குடும்ப அமைப்பின் அனுபவத்தினூடே தாய்தந்தையர் வேலைக்குச் சென்று வந்தாலும் சமையல், துவைத்தல் போன்ற வீட்டு வேலைகளின் சுமையை தாய் மட்டுமே சுமந்தது போலல்லாது கணவனாக வரப்போகும் ஆண் தனக்கீடாக அனைத்து வேலைகளையும் செய்யவேண்டும் என்னும் பெண்களின் எதிர்பார்ப்பில் தவறேதும் இல்லை. ஆனால் ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெண்கள், இன்னும் அன்றைய மனோநிலையுடனேயே மகன்மாரின் ஆடைகளைத் துவைத்து மடித்து வைப்பது தொடங்கி அவர்கள் உணவு உண்டபின் தட்டுகள், தேநீர் அல்லது பானங்கள் அருந்திய குவளைகளைக் கழுவுவது என ஆண் பிள்ளைகளைப் பொறுப்பற்றவர்களாகவே வளர்க்கின்றனர். அதுவே அவர்கள் குடும்பவாழ்வில் எத்தனை இடர்களை ஏற்படுத்தும் என எண்ணிப் பார்ப்பதில்லை. தாயின் வளர்ப்பினால் ஆணாதிக்கச் சிந்தனையே அப்பிள்ளைகள் மனதில் ஏற்படும் என்பதை எந்தத் தாயும் உணர்வதில்லை.

இன்னொருபக்கம் பெண் எத்தனை படித்த திறமைகள் மிக்கவளாக இருந்தாலும் திருமணத்தின் பின்னர் மருமகள் வீட்டிலேயே இருக்கவேண்டும் என எண்ணும் பெற்றோர்களும் இன்னும் இருக்கவே செய்கின்றனர். பெண்களை வெளியே திரிய விடாது இன்னும் வீட்டினுள்ளேயே முடக்கி வைப்பதுதான் தமக்கு நல்லது என்றும் எண்ணும் ஆண்களைப் பெற்ற பெண்களே பெண்களுக்கு எதிரிகளாவும் இருப்பது பெண் இனத்தின் சாபக்கேடு என்றுதான் கூறவேண்டும்.

பல திருமணங்களில் என் மகனுக்கு சீதனமே வாங்கவில்லை எனப் பெருமையாக மற்றவர்களுக்குக் கூறித் திரியும் ஆணைப்பெற்றவர்கள், திருமணவிழா செய்வதற்குரிய செலவுகள் அனைத்தையும் பெண் வீட்டார் தலையில் சுமத்துவதோடு திருமணத்தன்று மற்றவர்கள் அன்பளிப்பாகக் கொடுக்கும் பணத்தையும் தாமே எவ்விதக் கூச்சமும் இன்றி எடுத்துக்கொண்டு செல்லும் கூத்துக்களும் இடம்பெறுகின்றன. இதைக் கேட்டால் தம் பெண்ணின் வாழ்வு பாதிக்கப்படுமோ என்னும் ஐயத்தில் பலர் வாய்பேசாது இருந்தாலும் இரு குடும்பங்களுக்கிடையேயான முரண் அங்கே ஏற்பட்டுப் போவதை அவர்கள் எண்ணிப்பார்ப்பதும் இல்லை. அதற் காக வெட்கப்படுவதும் கூட இல்லை.

முற்போக்குச் சிந்தனை கொண்ட பல பிள்ளைகள் பெற்றவர்க்கு நாம் சுமையாக இருக்கக் கூடாது என்னும் எண்ணம் கொண்டவர்களாக திருமணத்தின் பின் தனியாக வீடு எடுத்து சுதந்திரமாக வாழ்ந்துகொண்டிருக்க, பலர் சேர்ந்திருக்கிறோம் என்னும் பெயரில் பெற்றோர்களைச் சுரண்டிக்கொண்டிருக்கின்றனர்.

வேலைக்குச் செல்லும் மகளின் குடும்பத்துக்கு சமைத்துவைப்பது, பிள்ளைகளை பள்ளிக்குக் கூட்டிச் சென்று மீண்டும் அழைத்து வருவது, பிள்ளைகளைப் பாராமரிப்பது போன்ற. வேலைகளில் மூழ்கடித்து அறுபது எழுபது வயது கடந்த தமது பெற்றோர்களை ஓய்வின்றி சுதந்திரமாக இருக்கவிடாது துன்பப்படுத்துகின்றனர் பல பெண்கள் இன்னொரு பக்கமும் உண்டு. சில பண்பற்ற தாய்மாரின் அறிவற்ற செயலால் திருமணமான பின்னர் பிள்ளைகள் வாழ்வில் தேவையற்ற தலையீடு, வீண் குழப்பங்கள், பிரச்சனைகள் என்பன ஏற்பட்டுப் போகின்றன. மருமகள் இப்படித்தான் ஆடை அணியவேண்டும் என்பது தொடங்கி இத்தனை மணிக்குள் வீட்டுக்கு வந்துவிடவேண்டும், தனியாக தான் நண்பிகளுடன் செல்லக்கூடாது, இன்னும் பலவாகப் பிரச்சனைகளை உண்டாக்கியவண்ணம் காலம் கழிக்கின்றனர். இன்னும் சிலரோ மகனுக்கும் மருமகளுக்கும் இடையில் பிரிவு நேரக் காரணமாக இருந்தும் "தம் பிள்ளை தான் சொல்வதைக் கேட்டுத் தன்னுடனிருந்தால் சரி. அவன் வாழ்வு எப்படிப் போனால் என்ன" என்று விட்டேந்திகளாக வாழ்ந்துகொண்டும் இருக்கின்றனர் என்பது வேதனையான விடயம்.



உலகம் இத்தனை முன்னேறிவிட்டாலும் தமிழ் சமூகக் கட்டமைப்பில் தமிழ்ப் பெண்கள் பலரும் தூரநோக்குச் சிந்தனையற்றுக் குறுகிய மனவோட்டத்துடன் இருக்கின்றனர். இதன் விளைவுகள் இன்னும் எம் பிள்ளைகளின் வாழ்வை சீரழிக்குமன்றிச் சிறப்புற வைக்காது என்பதை அவர்கள் விளங்கிக்கொண்டாலன்றி பெண்களைப் பெற்ற பெற்றோர் தொடர்ந்தும் பல பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிவரும் என்பதோடு பல திருமணங்கள் மணமுறிவுக்கே வழிவகுக்கும்.



## அணங்கின் ஆராதனை

பெண்- அவளை வணங்கிவிடு
அவள் அருள் பாலிப்பாள்
அகிலத்துக்கே!
பெண்-அவளை துதிபாடு
துன்பம் என்பது தூரமாகும்
பெண்- அவளை ஆராதித்தால்
ஆறுதல் வாழ்வின் நிஜமாகும்
பெண்- அவளை மதித்து நட
மகிழ்ச்சி மட்டுமே வரவாகும்
பெண்- அவளின் எண்ணங்களை
ஏற்றுவிடு
எண்ணிலா பிணக்கும் தீர்ந்து
விடும்பெண்- அவளை நேசித்து விடு
வாழ்வு முழுதும் யாசித்திருப்பாள்
பெண்- அவளை தட்டிக்கொடு
தடைகள் யாவும் தகர்த்திடுவாள்
பெண்- அவளிடம் வாளைக்கொடு
போர்க்களம் அது வாகை சூடும்
பெண்- அவளிடம் பாசம் காட்டு
பார் முழுவதும் அரவணைப்பாள்
பெண் -அவளின் உள்ளத்தின்
உருவமில்லா உணர்ச்சிகள்
எல்லாம் நேர் கொண்ட விளைவாகும்.
பெண்- அவள் உருவ அழகில்
மயங்காதீர் -நின்
எதிர்மறை எண்ணங்கள்
தகர்ந்து விடும்.

**மனோகரி ஸ்ரீஸ்கந்தராஜா**

.

## பெண்மையின் புகழ் பாட பைந்தமிழில் சிறு கவிதை

பேருலக படைப்பிற்கே
பெண்மைதான் முதலென்பேன்
அன்பின் மகுடமதும்
ஆடவள் தானென்பேன்,,

பெண்ணியம் போற்றாத
பேர் புகழ்தானுண்டோ இவ்வுலகில்,,,
பெண்மையை போற்றியே
பெருமானும் புகழ்கொண்டான் தேவுலகில்,,,,

பூமியை தேவியென்றார்
புகழுண்ட கங்கையும் பெண் என்றார்
தன் உயிருக்கு மேலான
தமிழையும் தாயென்றார்
தமிழின்றி என் கவியேது
தாயின்றி என் உயிரேது,,,,,,,

ஈரைந்து மாதங்கள்
இதயத்தை கல்லாக்கி
உதிரத்தை உணவாக்கி
ஊட்டி வளர்த்த தாய்மைக்கு
ஈடிணை ஏதென்பேன்,,,,,,,

தெய்வங்கள் ஆயிரம்
திசையெல்லாம் உண்டென்பேன்
தேவதைகள் தேவிகள்
தாயாகி மகளாகி
அக்காளாய் தங்கையாய்
தோழியாய் துணைவியாய்
இவ்வுலகு இயங்க இருதய சக்தியாய்
ஓய்வறியா உழைக்கும் பெண்மையே
தங்க தமிழக்கவியால்- உன்
தாழ் பணிந்தே போற்றுகின்றேன்.......

**வதனி சௌந்திரஸ்ரீதரன்**

## *அன்னை*

*அன்புக்கு தனி அகராதி சேர்ப்பவள்
ஆனந்தம் அவள் அடையாளம்
இரக்கத்தில் இணையற்றவள்
ஈகை நிறைந்தவள்
உறவு வளர்ப்பவள்
ஊக்கம் உடையவள்
எதுகை மோனையின் ஆசானவள்
ஏரம்பனைத் துதிப்பவள்
ஐக்கியம் காப்பவள்
ஒற்றுமைக்கு ஆணி வேரானவள்
ஓவியம் ஆனவள்
ஔவையின் உவமை அவள்
ஃ கற்றறிந்தவள்*

***அமிர்தா***


## THE NEWBORN

Mammas and Pappas,
You cultured me
To be kind and timid;
To be sensitive and attractive
To be loyal and honesty,
Supportive and empathetic ,
Compassionate and forgiving
Young mind.
You persist me
To have a big heart
A beautiful mind,
And a generous spirit!
But….
If you'd have
Upskilled your sons
Of all these traits,
I wouldn't be hunted
In a park,
Amidst the murky bushes,
Along the alleyways,
Or inside a barren space!

Mammas and Pappas,
If you'd have
Taught your sons
Of all these calibres,
My pride, innocence
Virtue and radiance
Wouldn't be plucked and wrapped
In black bags,
Gone disappeared
Into the frozen yonder!

The time's changed.
Things' swapped
No more weeping
Neither begging
Nor been a stoic soul!
Wake up world!
The LAMB,
Is born anew
Ready to roar,
Roar aloud!
To be heard
By the whole WILD world.

**By Thukitha Maheswaran**





# அவனும் அவளும்

எனக்குப் பிடிக்கல்லை. உனக்குக் கதை எழுத வரவில்லை. அப்படி எழுதிறதில்லை. அதெல்லாம் பழைய முறை. அதிக விளக்கம் தேவையில்லை. வர்ணிப்புகளும் வேண்டாம். பொறு ஒரு கதை எழுதி 'ரைப்' செய்து கொண்டிருக்கிறேன். விரைவில் அனுப்பிவிடுவேன். அதைப்பார். அதைப் பார்த்திட்டு என்ன மாதிரி எண்டு சொல்லு. கவிதைகள் எழுதுவது நல்லாயிருக்கு ஆனால் சிறுகதை... அந்தரப்படாதை. நல்லா வாசி. நல்ல புத்தகங்களை வாசி. சும்மா வாசிக்கிறதில்லை. நல்லாக உள்வாங்கி, அதுக்குள்ள போய்த் திளைத்து, ரசித்து வாசிக்கவேண்டும். இவைகள் அவனின் அறிவுரை.

நல்ல காலம் இவர் ஆசிரியத் தொழில் பார்க்கவில்லை. நறுக்காக நேருக்கு நேர் பிழைகளைச் சுட்டிக்காட்டுகிறார். இப்படி மாணவர்களை வழிநடத்தினால், மனமுறிந்து தொடர்ந்து கல்வி கற்பதை விட்டுவிட்டு, வேறு ஏதாவது தொழில்தான் பார்த்திருப்பார்கள். ஆசிரியர்மார்களுக்கு உளவியல் ரீதியான அறிவும், அனுபவத்திரட்டுக்களும், கற்பிக்கும் பாடத்தில் பூரண அறிவும் நிறைந்திருக்க வேண்டுமென அறிந்திருந்தாள். மாணவர்களின் மனதைப் பாதிக்காவண்ணம் கல்வியைப் புகட்டுவதில் கையாளும் பல்வேறு முறைகளை பரீட்சித்த காலங்கள் அவள் கண்முன் கரைபுரண்டு ஓடிவிட்டன.

ஆனால் நேருக்கு நேர் சுட்டிக் காட்டும்போது மனதிருத்தி திருந்தும் பக்குவம் பெற்றிருந்தாள்.

எவ்வளவு நல்ல குணம். மறைவின்றிக் கூறுவது. நேருக்கு நேர் ஆளைத் தெரியாத போதே அவனின் எழுத்தில் ஒரு கவர்ச்சி. வீட்டிற்கு வந்த கடிதம்தான். ஆனால் அவளின் பெயர் குறிப்பிட்டும் வரவில்லை. சம்பிரதாயத்திற்கும் சரி. பரவாயில்லை. அவள் அந்தக் கடிதத்தினை பத்திரப்படுத்தி 'பைலில்' இன்றும் வைத்திருக்கிறாள். கடிதத்தில் எழுதிய விடயங்கள் அல்ல, அதனை எழுதிய முறை. கடிதம் எழுதுவதற்கும் கலைக்கண் வேண்டும் என எண்ணிக்கொண்டாள்

ஆருக்குத் தெரியும்? இலங்கையில் எங்கெங்கோ இருந்த நாங்கள் பிரான்ஸ், இங்கிலாந்து என்று வந்து வாழ்வோம் என்று. அதுவும் அவனும் இங்கிலாந்துக்கு வந்து எங்கட வீட்டுக்கு வருவான் என்று.

அவனின் கதை வந்தது. அவள் இழைத்து, ரசித்து வாசித்து அதில் அவனைக் கண்டாள். அவனோடு பழகும்போது இப்படித்தான் இருப்பான் என்று கற்பனை செய்தாளோ அப்படியேதான் இருக்கிறான். மாற்றமில்லை. சிரிசிரியெண்டு தனக்குள் சிரித்துக்கொண்டாள். கதை நல்லம் அனுபவத் திரட்டுக்கள் செறிந்து இருந்தது. கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலத்திற்கு அறிவுரை கூட இருந்தன. இதுதான் சமூகமாற்றத்திற்கான இலக்கியம். எந்த ஒரு இலக்கியமும் வாசகனைச் சிந்திக்கத் துாண்டியது என்றால் அந்தப் படைப்பாளிக்கு வெற்றி என்று அவளின் அப்பா அடிக்கடி கூறுவார்.

**நவஜோதி யோகரட்னம்**

கதையை வாசித்து முடிந்ததும் அளவில்லாத சந்தோஷம் அவளுக்கு. தான் கதை எழுதியது மாதிரி. அவனோடு கனக்கக் கதைக்க வேண்டும் போல இருக்கு. அது எப்படி? கருத்துக்கள் கட்டாயம் பரிமாற வேண்டும். அவனோடு கதைத்தால் கனக்க விடயங்களை அறியலாம். அறிவை வளர்க்கலாம். மனிதர்கள் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். 'உம்' என்று சும்மா இருக்கக்கூடாது. மனிதர்களின் தேடலின் வெற்றியே இன்றைய உலகின் நவீன வாழ்க்கை.

அவள் தன் தந்தையோடு தர்க்கித்த சில விடயங்கள் வந்து போயின. ஆனால் அவாவின் அனுபவங்களைத் திரட்டுவதில் தவறிவிட்டாள். எத்தனை தரம் கேட்டிருப்பார். என்னிடம் கேள்விகள் கேள்? என்னோட கதை. கருத்துக்களைப் பதிவு செய்துவை. நல்லாக வாசி என்று. கேட்டாளா? கழுதையாட்டம் இருந்துவிட்டாள். அனுபவம் உள்ளவர்கள், தத்துவங்களை விளங்கிக் கொண்டவர்கள் ஏதாவது கூறினால் கேட்கவேண்டும். வயதுக்கோளாறுகளினால் ஏற்படும் ஆசைகளில் கவனத்தைச் செலுத்துவதில் காலத்தைக் கோட்டை விட்டுவிடுவார்கள். பேந்து என்ன? பேந்தென்ன நினைத்து நினைத்து முழுசிக் கவலைப்படுவதுதான் என்ன பிரயோசனம்? அந்தச் சுதந்திரம் இப்ப இருக்கா? கழுதை... கழுதை... தன்னையே திட்டிக்கொண்டாள்.

இப்போ அவள் யாரிடமாவது கதைக்க முடியுமா? முடியாது. கதைச்சாப்போச்சு. குடும்பம் மற்றும் வேலைகள். சிந்திக்கவும் முடியாது. 'கனாக்' காணுவதாகக் கூடப் பேச்சு. எப்படி விளங்கப்படுத்துவது? எமது சமூக அமைப்பு அப்படிப்பட்டது. நாகரிக நாடுகளில் ஆண்டுக் கணக்காக வசித்தும் என்ன திருத்தம்? பெண்களுக்கு எங்கே சுதந்திரம் கிடைக்கிறது? சில ஆண்கள் தாங்கள் எதையும் செய்து கொள்ளலாம். அது சோஷல் என்றாக்கி விடுவார்கள். ஆனால், பெண்கள் மட்டும் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டும். மற்றவர்களோடு கதைக்கக்கூடாது. கதைத்தால் வேறு பெயர். மாற்றுக் கருத்துச் சொல்ல முடியாது. அதுக்கு ஒரு பட்டம். எதைச் செய்தாலும் பாராட்டுக் கிடைக்காது. மனதைப் பொடியாக்கும் கதைகள். எதையும் எழுத முடியாது. அதுக்கும் ஒரு பெயர். உற்சாகப்படுத்துதல் கிடைப்பதில்லை. மௌனத்தில் தாக்குதல். அவள் எதிர் நீச்சல் போட்டல்லவா வாழ்வில் முன்னேறவேண்டியுள்ளது. என்ன செய்வது?

சில வேளைகளில் 'செல்' போனில் அவனை அழைத்து சந்தோஷம்போல் காட்டிக் கதைப்பாள். சுற்றியிருக்கும் சுவர்களோடா பேசுவது? இயற்கையும் அவளோடு பேசும். கவிதையும் பாடும். இல்லாவிட்டால் பைத்தியம்தான் பிடிக்கும். சில வேளைகளில் அழுகையும் வந்துவிடும் அவளுக்கு.

என்ன செய்வது? அவள் சொல்லிக்கொண்டே இருப்பாள். அவன் கேட்டுக்கொண்டேயிருப்பான். அவள் கேள்விகள் கேட்பாள். அவன் பதில்கள் சொல்லிக்கொண்டேயிருப்பான். போனில் கதைகள் ஓடிக்கொண்டேயிருக்கும். 'சட்டென்று வெடித்து அழுவாள். எதுவுமே அவனால் செய்ய முடியாது. ஆறுதல்படுத்திக் கதைப்பான். எப்படி? அழாதை. முகத்தைத் துடை. முதலில் சுடுதண்ணீரில் குளி. கண்களை மூடு. ஒன்றையும் சிந்திக்காதே! பின்னர்அந்தப் படத்தைப் பார்.

எந்தப் படத்தை? அவள் சிரித்தாள்.

யேசு படத்தைத்தான். அவனும் சிரித்தான். எனக்கு அதிக வேலை இருக்கு. பேந்து போன் செய்வேன். ஒன்றும் யோசிக்காதே! ஏதாவது எழுது அல்லது வாசி.

என்ன மூளை அவனுக்கு. சிரிக்க வைத்துவிட்டான். அவனுக்குச் சிரிப்புத்தான் தொழில். அவளும் முன்பு அப்படித்தான். உண்மையில் மனிதர்கள் சிரித்துக்கொண்டேதான் இருக்க வேண்டும். இதயத்திலிருந்து தனக்குள் கூறினாள்.

வெளியில் பார்த்தால் எல்லோரும் சந்தோஷமாகத்தான் இருக்கிறார்கள் என்று எடை போட்டவிடுவோம். ஆனால் ஒவ்வொரு குடும்பங்களுக்கிடையேயும் ஒவ்வொரு மகாபாரதக் கதை உண்டு.

ஊரில் பாடசாலைப் படிப்பு முடிந்ததும், சிலர் படிப்பைத் தொடர்வார்கள். குடும்பம், பிள்ளைகள், வேலைகள், தனக்கு வயது போய்விட்டது. இதுதான் வாழ்க்கை என்றாகிவிடும். ஆனால் வெளிநாடுகளில் அப்பிடியில்லை. வயதைப் பற்றி அலட்டிக் கொள்ளமாட்டார்கள். அறிவைத் தூண்டும் வகையில் ஏதாவது கற்றுக்கொண்டே இருப்பார்கள். உடலிலும் உள்ளத்திலும் இளமையை உணர்வார்கள். எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? வாழ்க்கையை நிமிடம் நிமிடமாக மகிழ்ச்சிப்படுத்திக் கொள்வார்கள்.

அப்பாடி லண்டனில் படிப்பதற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன. இரவு வேளைகளில் 'கொம்பியூட்டர் வகுப்புகள். விருப்பமான துறைகளில் பயிலும் வாய்ப்புகள் அதிகம்.

ஒரு நாள் வகுப்புக்கு வந்த நண்பியின் முகம் வீங்கியிருந்தது. கண்ணடியில் கறுத்தும் இருந்தது. வகுப்பில் இருந்தவர்கள் எல்லோரும் ஒரு மாதிரி அவளைப் பார்த்தார்கள். இவளும் பார்த்துச் சிரித்துவிட்டு இருந்துவிட்டாள். வகுப்பு முடிந்தது.

உடம்பு சரியில்லைப்போல என்று நண்பியிடம் கேட்டாள்.

உடம்பும்தான் உள்ளமும்தான். 'பட்' டென்று பதில் சொன்னாள். ஏதாவது கவலைகள் மனதை வாட்டினால் மனமிசைந்த யாருக்காவது சொல்லிவிட வேண்டும். இல்லாவிடில் அது உடம்பையே தாக்கி ஆளையே அழித்துவிடும்.

அவள் ஒரு பட்டதாரி. பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது ஏற்பட்ட காதல். கருத்துக்களும் உணர்வுகளும் ஒன்றுபட்டபோது ஏற்பட்ட காதல். இன்றும் அவளுள் அவன் மறைந்து வாழ்ந்துகொண்டிருக்கிறான் போல இருக்கு. இலங்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளால் அவன் கைது செய்யப்பட்டு காணாமல்போய்விட்டான். இன்றுவரை என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது . காணாதவர்களின் பட்டியலில் அவனும் ஒருவன் பின்னர் குடும்பத்தின் வேண்டுதலில் வேறு திருமணம். கணவரோ பட்டதாரியுமல்ல. பிள்ளைகளும் பெற்றுவிட்டோம். ஆனால் வீட்டில் ஏற்படும் சிறு சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் எனது காதலை விபரித்து பிள்ளைகளுக்கு முன் வைத்துப் பேச்சும் அடியும்தான். நான் என் காதலனை மறந்தாலும், என் கணவரால் மறக்க முடியாதுள்ளது. என்னை வேதனைப் படுத்துவதுதான் வேலை.



காரில் என்னை கொம்பியூட்டர் வகுப்புக்கு விடும்படி கேட்டபோது வாக்குவாதம் ஏற்பட்டது. கார் ஓட்டிக்கொண்டிருந்த தனது முழுப்பலத்தை கையில் எடுத்து எதிர்பாராத விதமாக என்னைத் தாக்கிவிட்டு... அதுவும் இப்படி முகத்தில்... எப்படி.... நான் என்ன செய்ய? தன் மனதைக் கொட்டித் தீர்த்தாள் நண்பி.

எமது சமூக ஆண்களுக்கிடையில் எப்போதுதான் மனங்கள் பக்குவப்படப்போகுதோ! நண்பியை ஆறுதல்படுத்திக் கொண்டாள் அவள். ஐரோப்பியர்கள் சில விடயங்களில் நாகரிகமாத்தான் நடந்துகொள்கிறார்கள். நேற்று நடந்தவைகள் நேற்றோடு முடிந்துவிட்டன. அதனை முடிந்தவரை மறந்துவிடுவார்கள். இன்று புதிய நாள் சந்தோஷமாக இருப்போம் என்று நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் சந்தோஷமாகக் கழிக்க விரும்புவார்கள். வாழ்க்கையைச் சந்தோஷமாக்க முற்படுவார்கள். துக்கங்களை விரைவுபடுத்தி மறந்துவிடுவார்கள். எங்களால் முடியுமா?

பிரான்சில் உலகப் பாடல்கள் சேமித்து விநியோகம் செய்யும் கொம்பனி ஒன்றில் வேலை செய்தவள். அங்கு பிரெஞ்சுக்கார நண்பி 'கிறிஸ்தல்'தான் உயிர். இருபது வயதிருக்கும். அவளோடு ஒட்டு என்றால் ஒட்டு. காலையில் மெஷினில் கோப்பி அடித்துக் குடித்தாலும் இருவரும்தான். 'கன்ரின்' இல் சாப்பிடப்போனாலும் ஒன்றாகத்தான் செல்வார்கள். மாலையில் வீடு திரும்பும்போதும் ஒன்றாகத்தான் செல்வார்கள். அவளுக்கு இந்த அன்பு வந்ததென்று புரியவில்லை. ஆச்சரியம் தான். பிரெஞ்சுக்கார முதலாளிமாரிடம் 'மனிதாபிமானம் நிறைய இருந்தது. காலை பத்து நிமிடம், மாலை பத்து நிமிடம் ஓய்வு. மத்தியானம் ஒரு மணித்தியாலம் சாப்பாட்டுக்கு ஓய்வு கொடுப்பார்கள். சுக துக்கங்களையும் நண்பர்கள்போல் விசாரிப்பார்கள். மனது சந்தோஷப்பட்டு வேலை செய்யக்கூடியதாகவிருக்கும்.

ஓய்வு நேரம் என்றால் காணும். 'புக்கு புக்கு' என்று நடுங்கும் குளிருக்குள் போய் புகைத்துத் தள்ளுவார்கள்.

'வாடி கிறஸ்த்தல் கோப்பி குடிக்க'

'வேண்டாம். நான் என் மேசையில் எடுத்துக்கொண்டு வந்து குடிப்பேன்'

'ஒரு சிகரெட்' புகையடி? என்று கிறிஸ்தல் கேட்பாள்.

'எனக்குப் புகைக்கத் தெரியாது. சீ எனக்கு வேண்டாம். நாங்கள் புகைப்பதில்லை. வேண்டாம்'

சரி வேண்டாம் என்றால் பிரச்சினையில்லை. வா வெளியில் வந்து சுத்த காற்றாவாவது சுவாசி. நாள் முத்தும் கொம்பியூட்டருக்குள்ள மூழ்கி தலையைப் பழுதாக்காதே!

நண்பியின் வற்புறுத்தல். ஓய்வு நேரத்தில் வெளியில் செல்வாள். பனிப்புகாரோடு ஆண்களும் பெண்களும் சேர்ந்து வட்டம் போடும் சிகரொட் புகை ஊதல்கள். தலை வெடிக்கும் அவளுக்கு.

புறூனோ' பிரெஞ்சுக்கார பொடியன்தான். கிறிஸ்தலைவிட ஒன்று இரண்டு வயது கூட இருக்கும். அவனும் வந்து எங்களோடு ஒட்டிக்கொண்டான்.

கிறிஸ்தலில் புறூனோவுக்குக் காதல் பிறந்துவிட்டது மாதிரித்தான் இருந்தது. ஓய்வு நேரங்கள் என்றால் காணும், கட்டிப்பிடித்தபடிதான். கண்ணையும் கண்ணையும் பார்த்து கொஞ்சிக் கொண்டேயிருப்பார்கள்.

அவள் அவளைத் தூக்கியும் சுத்துவான். யாருமே அவர்களைச் சட்டை செய்வதில்லை. இது என்ன ஆக்கினைக்கு இவர்களோடு வேலை செய்ய வந்தேன்?

என்று இவள் எண்ணுவாள். ஆரம்பத்தில் இவளுக்கு அந்தரமாக இருந்தது. சில நாட்களில் பழகிவிட்டது. அது அவர்கள் சுதந்திரம் என்றாகி விட்டது. மற்றவர்கள்போல் நாகரிகமான முறையில் நடந்துகொள்வாள்.

கிறிஸ்த்தல் புறூனோ காதல் மிக வேகமாக வளர்ந்த வீடுவரை சென்றது. பெற்றோர்கள் எப்படி இதை அனுமதிக்கிறார்கள். கொஞ்சம் வயது போனவர்கள்கூட அதுகள் சின்னதுகள், அதுகள் அப்படித்தான் என்று பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்களே!

ஊரில பக்கத்துவீட்டு மலரக்கா ஒரு பொடியனைக் காதலிச்சிட்டா. ஏதோ சாதியும் வேறையாம். பாவம் பஸ்ஸில் பக்கத்தில் அந்தப் பொடியனோட இருந்து பிரயாணமும் செய்து போட்டா. முடிஞ்சுது கதை. அந்த ஊர் ஆட்கள் பிடித்து என்ன அடி அந்தப் பொடியனுக்கு. மலரக்காவுக்கு அம்மாவும் இல்லை. பாவம். அடுத்தநாள் அம்மம்மா திரேசம்மா இவளுக்குக் கட்டளை. 'நீ மலரோட கதைக்கக்கூடாது' விளையாடப்படாது.

'ஏன் அம்மம்மா கதைச்சா என்ன?'

'கதைக்கப்படாது. அவ்வளவுதான். உனக்கு விளக்கம் தேவையில்லை'

பிரெஞ்சுக்காரர் காதலிச்ச உடனேயே எப்படி வீடு சென்று வருகிறார்கள்? இதென்ன கேவலம். கலியாணத்துக்கு முன்னர் இப்படி சில காலங்கள் சென்றதும் இருவருமே பிரிந்து விட்டார்கள். இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. எந்தவித மனக்கவலையோ, தாக்கங்களோ இன்றிக் காணப்பட்டார்கள். உள் மனங்கள் எப்படிப்பட்டவையாக இருந்திருக்கும் என அவளுக்குத் தெரியாது. புறூனோவும் வேலை இடத்தை மாற்றிவிட்டான் இஞ்சவாடி சனியனே கிறிஸ்த்தல். இவ்வளவு விரைவாக உன்னுடைய காதல் முறிந்துவிட்டதே! காதல் சலித்துவிட்டதா? கேட்கக்கூடாது. ஆனால் கேட்டுவிட்டாள்.

'ஓம்' பழகிப் பார்த்தேன். எனக்குப் பிடிக்கவில்லை. விட்டிட்டன். அவ்வளவுதான் 'நீ எவ்வளவு படித்தாய்?' கொஞ்ச வயது தானே! 'நடுத்தர வகுப்புத்தான் படித்தேன். தொடர்ந்தும் படிக்கவில்லை. எனக்கு வேலை செய்ய வேண்டும் போலிருந்தது 'நீ எவ்வளவு படித்தாய்?' கொஞ்ச வயது தானே! 'நடுத்தர வகுப்புத்தான் படித்தேன். தொடர்ந்தும்படிக்கவில்லை. எனக்கு வேலை செய்ய வேண்டும்போலிருந்தது.

'அப்பா அம்மா ஒன்றும் சொல்லவில்லையோ?'

இல்லை. பதினெட்டு வயது வந்ததும் நான் தானே முடிவு எடுப்பது. எனக்கு படிக்க விருப்பமில்லை. காசு சேர்த்து கார் வேண்டப் போகிறேன்.

இந்த நாடுகளில் இப்படி கல்விக்கான வசதிகளை வைத்துக் கொண்டு அறிவுக்குக்கூட முழுக்குப் போட்டு விடுகிறார்கள். நாமோ முற்றிலும் மொழி, கலாச்சாரத்துக்கு மாறுபட்ட இடத்தில் வந்து வேலை செய்கிறோம். எமது நாட்டுப் பிரச்சனைகளால் மேற்படிப்பை முடிக்கவில்லை என்று எம்மிடையே எத்தனை உள்ளங்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் வசதிகளை வைத்துக்கொண்டு பயன்படுத்தத் தவறிவிடுகிறார்களே!

இந்த வெளிநாட்டவர்களை விட எமது நாட்டவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள். உண்மைதான் உலகத்தையே ஆட்டிப்படைத்த லண்டன் சாம்ராஜ்யத்துக்கு வந்து எங்கட சனம் என்னென்னவெல்லாம் சாதிக்கறார்கள். அதுக்கும் ஒரு 'ஸ்பெஷல்' மூளை வேணும். லண்டன் அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தால், அதையும் சுளியோடி பெயர் மாற்ற வேணுமோ, வயது மாற்ற வேணுமோ, இருப்பிடம் மாற்ற வேணுமோ. 'லோண்' எடுக்க புதிய கொம்பனிகள் வடிவமைத்துக் காட்ட வேண்டுமோ! இன்னும் எத்தனை எத்தனை ...எப்படி எப்படியெல்லாம் மூளை ஓடும் தெரியுமா? கொம்பியூட்டர்கள் தோற்றுப்போய்விடும். லண்டனுக்கு வந்து யார் யாருக்கு

களவு. பொய், தந்திரங்கள் தெரியுமோ.

அவர்கள் தான் கெட்டிக்காரர்கள், மூளைசாலிகள், பணக்காரர்கள் இது என்ன சிலபேர் சுவாமியிட்டையும், சிஸ்டர்மாரிட்டையும் படிச்சுப்போட்டு வந்து. அவர்களின் போதனைகளைக்கேட்டிட்டு வந்து எப்படி மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கிறது. முடியாது. ஓட்டைவாய்கள். எனவே கஸ்டம்தான் வாழ்க்கை. அவன் கூறினான். எமக்கு ஏற்படுகின்ற அனுபவங்கள் பதியப்பட வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் எத்துனை அனுபவம் இருக்கிறது தெரியுமா? வாழ்க்கையில் இருந்து பெறுகின்ற அனுபவம் எல்லாமே கல்விதான் வாழ்க்கையில் இருந்து பெறுகின்ற அனுபவம் சிந்தனையைத் தூண்டும்போது அது புதுமை பெற்று பொதுச் சொத்தாக மாறவேண்டும்.



அறிவுச் சுடர் கொழுத்திய சோக்ரட்டீசுக்கு அநியாயமாக மரண தண்டனை வழங்கப்பட்டது. சிறையிலிருந்தபோது சக சிறைவாசிகளோடு உரையாடிக் கொண்டிருந்தாராம். அவரின் சிந்தனை பல கேள்விகளை உதிர்த்துக் கொண்டிருந்ததாம். அப்போது மற்றச் சிறைவாசியிடம் அது பற்றிக் கேட்டாராம். சிறைவாசிக்கோ சோக்ரட்டீசை நினைக்கச் சிரிப்பு வந்ததாம். நாளை உனக்கு மரண தண்டனை நிறைவேறப் போகிறது. இன்று இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாயே! என்று கேலியாகக் கூறிக்கொண்டானாம். அதற்கு அவர் நாளை நான் சாவதற்கிடையில்கூட புதிதாகச் சிந்தித்துவிட வேண்டும் என்றாராம். மரணத்தைத் தழுவும் நேரத்தில்கூட அவரது மனந்தளராத ஊக்கம் எத்தகையது! அதுதான் இன்றுகூட உலகின் தத்துவக் கருத்துக்கள் யாவும் சோக்ரட்டீசின் கருத்துக்களில் அடங்கியிருக்கின்றனவோ! அற்புதமாக கருத்துக்கள்.

அன்று அவன் வீட்டுக்கு வந்தான். சரியான சந்தோஷம் அவளுக்கு. சிறிய ஒரு 'பாட்டி' மாதிரி வீட்டில்.

சிறுகதை மாதிரி ஒன்று எழுதி வைத்திருக்கிறேன்.

கொண்டா பாப்பம். ஆக்கபூர்வமான கதைகள் என்றால் அவதானமாகக் கேட்பான். சோர்வின்றி துரிதமாக இயங்குவான். முக்கியம் தேவையானதொன்று.

'பட பட' என்று வாசித்தான் பார்த்தியா? வாசித்த அவ்வளவும் நல்லாயிருக்கு எழுத எழுத வரும். அது வரும். சரி இப்ப வாசி. நல்லாகத் தள்ளியிருந்து வாசி.

அவள் வாசித்துக்கொண்டிருந்தாள்.

அவன் அதனைக் கணணியில் 'ரைப்' செய்துகொண்டிருந்தான். எனக்குப் பிடிக்கல்லை...

அவள் தொடர்ந்து எழுதவேண்டும்.

அவள் தொடர்ந்து 'ரைப்' செய்ய வேண்டும்.

இவை சமாந்தரமாகத் தொடரவேண்டும்.

# அருட்டும் இருட்டு



நான்
கனவுப் பயணத்தில் இருந்து
இறங்கிக் கொண்டேன்.
ஆனால்
இப்போது எங்கே இருக்கிறேன் - என
சொல்ல முடியவில்லை
குழப்பத்தில் நான்....
பாதைகள் மங்கலான
புகைமூட்டம்
பருவங்கள் கண்டிராத
பெருங்காற்று
மக்கி உக்கிப்போன
சுவர் பூச்சு - அதற்குள்
தெளிவற்றுப் போன
ஒரு காட்சி
பயத்தின் விளிம்பில் நான்...
காலடியில் கிடந்த
சுள்ளியை கையில் எடுத்து
துணிவை தோண்டியெடுக்க
முயற்சிக்கிறேன்...
சட சடத்துப் பறந்து போன
ஆந்தையினால்
அங்கம் அசைந்து நின்றது
நின்ற மூச்சு மெல்ல
வெளியில் வந்தது...
எங்கோ தொலைந்து
போன நான்
நம்பிக்கை இழந்து போனேன்....
நாய்கள் ஊளையிட்ட
சத்தம் கேட்டு
சுற்று முற்றும் பார் க்கிறேன்...
பேய்கள் நடமாடும்
குச்சொழுங்கைகள் தெரிந்தது
அம்மணமானால்
பேய்கள் அண்டாதாம்
யாரோ சொன்னது...
ஆடையை இறுக்கிப்
பிடித்துக்கொண்டேன்...
அண்டத்தை நிமிர்ந்து
பார்த்தேன்...
அருட்டும் இருட்டை விட்டு
அங்குலமாய் அசைந்தேன்
மருட்சி விலகியதாய் ஓர் உணர்வு
புளியமரச் சந்தி கடக்கிறேன்
பூனையை குறுக்கிட்டு நடக்கிறேன்.
மொட்டைப் பனைமரத்தில்
குறுகுறுத்த ஆந்தை
பறந்து போனது....
குச்சொழுங்கை பேய்கள்
ஆட்டத்தை நிறுத்தியது...
பெருங்காற்று தலைசாய்து
அசைந்தது
ஒளிப்பட்டை சின்னதாய்
தெரிந்தது
வண்ணச் சுவருக்குள்
வடிவாய்த் தெரிந்தது
காட்சி
இப்போது நான்
சொர்ப்பனத்தில் கண்டதை தேடி
சோர்விலாது நடக்கிறேன்

றஜித்தா சாம்

# உரைசால் மங்கைக்கு எம் அஞ்சலி







இலண்டன் தமிழ்ப் பெண்கள் அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரான செல்வி உதயகுமாரி பரமலிங்கம் அவர்கள் 30.08.2021 அன்று இவ்வுலகை விட்டு நீங்கி எமைத் துயரில் ஆழ்த்தினார். நிலா, அரியாலையூர் அம்புஜம் என எல்லோராலும் அழைக்கப்படும்இவர் கலை இலக்கியத்துறையில் தொடர்ந்து பயணித்து வந்தவர். வாழ்வே போராட்டமெனினும் தனது தன்னம்பிக்கையால், விடா முயற்சியால் தலைமைத்துவப் பண்பால் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தவர்
.
திரு திருமதி பரமலிங்கம் அவர்களின் அன்பு மகளான இவர், இலண்டன் மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் கணனி வலை பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர். ஆயினும் தமிழ் மீது கொண்ட பற்றால் தமிழ் இலக்கியத்துறையில் ஆர்வமுடன் ஈடுபட்டவர். அத்துடன் தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களிலும் தன் ஆற்றரை வெளிப்படுத்தியவர்.

எழுத எழுத
எந்தையும் யானும்
நிலாவின் இந்திய உலா
உறைக்கும் உண்மைகள்
அம்மா வாழ்க
என்பன இவர் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.

இலண்டன் தமிழ்ப் பெண்கள் அமைப்பின் முதலாவது தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அமைப்புக்குரிய யாப்பு, இலச்சினை, மின்னஞ்சல், முகநூல் அனைத்தையும் உருவாக்குவதில் சிரத்தை காட்டினார். இன்று இவருக்குத் துயரோடு அஞ்சலி செலுத்துகின்றோம்.

ஆளுமைப் பெண்ணே! சிரமங்களைச் சாதனையாக்கி உன் வாழ்வுக்கு நீயே முன்னுதாரணமாக்கி வெற்றி கொண்டாய். என்றும் எம் மனதில் வாழ்வாய்.

# ஈழப்போரும் பெண்களும்

இயற்கை எழில் கொஞ்சும் நாற்புறமும் கடலால் சூழப்பட்ட அழகிய சிறிய தேசம் எங்கள் ஈழம். " ஈழம் எங்கள் நாட்டா இன்ப மான வீட்டா " என்ற சிறுவயதில் படித்த வரிகளையும் மறக்க முடியாதல்லவா. நிலா வெளிச்சத்தில் கூடியிருந்து உணவுண்டு கதைகள் பல பேசியவையும், முற்றத்தில் கிளித்தட்டு விளையாடியவையும், இரவு பகலாக கோயில்கள், விழாக்கள், கூத்துக்கள், பட மாளிகைகள் என்று மக்கள் கூடிக்களித்து இருந்தமையும் ஒரு பொற்காலம்.

ஈழத்தின் வனப்பையும் செழிப்பையும் அனுபவித்து உறவுகளுடன் கூடி பயமின்றி, நிம்மதியாக உண்டு, உறங்கி வாழ்ந்தார்கள் நாற்பது வருடங்களுக்கு முன் தாயகத்தில் வாழ்ந்த பெண்கள்.

ஈழத்தாய் திருநாட்டில் பிறந்ததால் அவளின் கனவுகள் கலைக்கப்பட்டு வேதனைகளையும் துயரங்களையும் சுமந்து துவண்டு நிற்க்கிறாள். அமைதியும் அழகும் நிறைந்த சூழலில் பல எதிர்கால கனவுகளுடன் வளரும் பெண்களின் கனவுகள் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டன. பாதுகாப்பற்ற பயத்துடன் கூடிய நிம்மதியற்ற வாழ்வை வாழும் நிலமைக்கு வந்தனர்.

பண்டைக் காலத்திலிருந்தே உலகளாவிய போர்களினாலும், உள்நாட்டுப் போரினாலும் பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. அவ்வாறே ஈழத்தில் ஏற்பட்ட போரினாலும் பெண்கள் அதிகளவில் பாதிப்புக்குள்ளானார்கள். உடல் உள பாதிப்புகளால் சொல்லமுடியாத துன்பத்தில் துவண்டனர். தாம் பிறந்து தவழ்ந்து விளையாடிய மண்ணில் நிம்மதியாக உண்ணவோ உறங்கவோ முடியவில்லை. சுதந்திரமாக உலாவ முடியவில்லை. உயிருக்குமட்டுமல்ல ஆபத்து அவளின் பெண்மைக்கும் ஆபத்து. தன்னை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பள்ளிக்குச் சென்றுபடிக்கமுடியாது, நண்பிகள் உறவினர்களுடன் முன்போல கூடி மகிழ முடியாது, வேலைக்குச் சென்று சம்பாதிக்கமுடியாது, படித்த படிப்புக்குரிய வேலை இல்லை, பல்கலைக்கழக தெரிவில் சமவுரிமை இல்லை. இப்படி எல்லாவற்றிலுமே பாரபட்சம், பாதுகாப்பற்ற தன்மை உருவாகியது.

குண்டுச் சத்தமும் உயிர்ப் பலிகளும் அதிகரித்து எங்கும் இழப்புகள். எங்கே ஓடுவது, எங்கே மறைவது முடியவில்லை அவளால். பாதுகாப்புத் தேடி பிறநாடுகளுக்குச் சென்றனர் சிலர். வசதிகள் வாய்ப்புக்கள் கிடைத்தவர்கள் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வாழ்வுக்காகவும், வருமானத்திற்காகவும், பாதுகாப்பையும் தேடி பிறநாடுகளுக்குப் பறந்தார்கள். பறக்கமுடியாதவர்கள், விரும்பாதவர்கள் துன்பங்களை அனுபவித்தனர். தன்னையும் சமூகத்தையும் தாயகத்தையும் பாதுகாத்து தன்மானத்தோடு வாழ்வதற்காக பலர் வீறுகொண்டு எழுந்து வேங்கையானார்கள். இடையிலே சிறிது காலம் வீறுகொண்டவர்களால் நடுச்சாமத்திலே உலாவ முடிந்தது, உறங்க முடிந்தது. பாதுகாப்பாக பயமின்றி வாழ முடிகிறதே என்ற நிலை சிறிதுகாலம் தான். நீடிக்கவில்லை அந்த நிம்மதி. மூண்டது போர், முடங்கியது வாழ்க்கை. தந்தையை, தனையனை தலைவனை சகோதரனை நண்பனை இழந்தாள். தனக்கான இருப்பிடத்தை இழந்து இடப்பெயர்வுக்குள்ளானாள்.

இதுவரை ஆண்களின் வருமானத்தால் இயங்கிய குடும்பங்களின் பொறுப்பானது அவர்களின் இழப்பால் பெண்களின் தலையில் சுமத்தப்பட்டது. அவளுக்கு உயிரிழப்புக்களின் பிரிவுத் துயரோடு குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் வந்து சேர்ந்தது. குடும்பத்தையும் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டு வருவாயைத் தேடவேண்டிய முழுப்பொறுப்பும் பெண்களிடம் திணிக்கப்பட்டது.

**அகல்யா நித்தியலிங்கம்**

போர் முடிவுக்கு வந்து அமைதியை மீட்டெடுத்து விட்டதாக ஆர்ப்பரிக்கிறார்கள். ஆனால் அமைதிக்குள் அடங்காத, அணையாத அளவிடமுடியாத வேதனைகள், சோதனைகளுடன் பெண்கள் இருக்கிறார்கள். அவளின் போராட்டம் முடிவுக்கு வந்ததா ? வருமா ?

கணவனை இழந்த கைம்பெண்களோ ஆயிரக்கணக்கில். இவர்கள் வாழ்வுக்காக, அன்றாட தேவைக்காக, வாழ்வாதாரத்துக்காக, சமூக பாதுகாப்பிற்க்காக போராடவேண்டியுள்ளது. வருவாயைத் தேடிச் செல்லும் போது, வேலை இடங்களும் பண்ணைகளும், தொழிற்சாலைகளும் இராணுவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அங்கு பாலியல் வன்முறைகளுக்குள்ளாகுகிறார்கள். அதிகளவில் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு குறைந்த ஊதியத்தை வழங்கும் நிலை. கௌரவமற்று நடாத்தப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் நாற்பது வயதுக்குட்பட்ட இளம் கைம்பெண்கள் என்பதால் பாலியல் ரீதியான , கலாசார கண்காணிப்புக்களும் இவர்கள் மீது சுமத்தப்படுகிறது. கடுமையான இந்து, சாதி ஒழுக்கங்களைப் பேணும் தமிழ் சமூகத்தில் மாங்கல்ய பாக்கியம் இல்லை என்று வீட்டு வேலைக்காரிகளாக வைப்பதற்குக் கூட தயங்கும் நிலை. வீட்டையும், வயது முதிர்ந்தவர்களையும் பராமரிக்கவேண்டும். இளம் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும். சரியான பாதுகாப்பில்லாத வீடுகள், சூழல்கள், ஆண்களை இழந்த நிலை. எத்தனை பெரிய சுமை இவளுக்கு.

ஈழப்போரினால் இவைமட்டுமா ஏற்பட்டது பெண்களுக்கு. அவள் உடல் உள ரீதியாகவும் நோய் வாய்ப்பட்டாள், நரம்புத்தளர்ச்சி, மன உளைச்சல், மன நோய்கள் என எத்தனையோ ஏற்பட்டன. பண்டிகையில் பட்டாசு வெடித்தாலோ பக்கத்தில் ஒரு பொருள் விழுந்தாலோ குண்டுவெடித்து விட்டதா? சுடுகிறார்களா? என்று பயந்து குழப்பமடைகிறாள். காதுக்குள் எந்த நேரமும் குண்டுகள் வெடிப்பது போன்ற ஓசை ஒலித்துக்கொண்டிருக்கும். நித்திரையில் " பங்கருக்குள் ஓடு, படு, சுட்டுட்டான், வெடிக்குது" என்ற புலம்பல் பயம். இவை இன்னமும் ஓயவில்லை.



போர்க்காலங்களில் பாவிக்கப்பட்ட குண்டுவீச்சுகளினால் நச்சுப்புகையினால் பலர் நோய்வாய்ப்பட்டனர், உடல் உறுப்புகளை இழந்து அங்கவீனர்களாகி தொழில் செய்யமுடியாத, தமது வேலைகளைக் கூடச்செய்யமுடியாது அடுத்தவரை எதிர்பார்க்கும் நிலைக்குட்பட்டுள்ளனர். கண் பார்வையற்றவர்களாகி, தடுப்புமுகாம்களில் சித்திர வதைக்குட்படுத்தப்பட்டு அங்கு ஏற்றப்பட்ட மருந்துகளாலும் பாதிக்கப்பட்டனர்.

காணாமல் போதல் என்னும் நீண்ட கால அச்சுறுத்தலாலும், காரணமின்றிய திடீர் கைதுகளாலும் பெண்கள் பாதிப்புக்குள்ளானார்கள். தமது பிள்ளைகளையும் துணைவரையும் சகோதரனையும்

தேடிக்கொண்டிருப்பதுடன் சமூகத்தின் கேள்விக்கணைகளுக்கும் பதில்கொடுக்கவேண்டும். தந்தை எங்கே என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாத போது அக்குழந்தை உளவியல் ரீதியாக பாதிப்படைகிறது, படிப்பிலும் கவனம் செலுத்தமுடியாமல் உள்ளது. இதனால் உடல் உள ஆரோக்கியம் கெடுகிறது. மன அழுத்தங்களுடனும், அச்சத்துடனும் பாதுகாப்பற்று ஒடுங்கிப்போகிறார்கள். இது இளம் பிள்ளைகளுக்கு உளவியல் ரீதியான பெரிய பாதிப்பைய் ஏற்படுத்திவிட்டது. காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கும் விடுவிப்பதற்கும் பெருமளவில் செலவு செய்யவேண்டியுள்ளது.

இராணுவக் கண்காணிப்பும் சோதனைகளும் அதிகரிக்கும் போதெல்லாம் பெண் வாழ்வும் சாகடிக்கப்படுகிறது. இராணுவச் சுற்றி வளைப்புகளால் ஆண்கள் அழிக்கப்பட்டு பெண்ணின் உடல் சூறையாடப்படுகிறது. வன்புணர்வுக்குட்படுத்தப்படுகிறாள்.



இறந்தபின் கூட உடல்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. அமைதிக்காக வந்தவர்கள் கூட பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டமை உலகறிந்த விடயமே. இங்கு கொடுமை என்னவென்றால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களை சமூகமே நிராதரவாக கைகழுவி விடும் நிலைமை தான். பாலியல் வன்செயல்களிலிருந்து கைம்பெண்கள் தம்மையும் பாதுகாத்து தம் இளவயது குழந்தைகளையும் பாதுகாக்கவேண்டும். இராணுவத்தினரின் கட்டாய திருமணத்திற்கும் முகம் கொடுக்கவேண்டும்,. போர் முடிந்து பல வருடங்களாகியும் அதன் பாதிப்புக்கள் குறையவில்லை , தொடருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒருவரையாவது இழந்து இருக்கிறார்கள். சிதைக்கப்பட்ட வாழ்வின் முழுத்துன்பத்தையும் பெண்கள்தான் அனுபவிக்கிறார்கள். இடப்பெயர்வுகளால் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத சூழல் தான் இன்றளவும் உள்ளது. சொந்த இடங்களில் சுயதொழில்களை செய்வதன் மூலம் பொருளாதார வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும். உடலளவில், பொருளாதார ரீதியில், சமூக அளவில் பாதுகாப்பற்ற நிலையிலும் மன அழுத்தத்திலுமே வாழ்கின்றார்கள் இங்கு பெண்கள் தங்களின் சுயமரியாதைக்காக போராடுவதுடன் அவர்களின் சுயமரியாதையையும் பேணவேண்டும். பாலியல் உரிமைகள் பேணப்படவேண்டும். தங்களின் வாழ்க்கையை தாங்களே தீர்மானித்துக்கொள்ள முன் வரவேண்டும். சாதி, மத, பிற்போக்கு கோட்பாடுகளை உடைக்கவேண்டும். பெண்களே பெண்களுக்கு எதிரியாகாத நிலை வேண்டும். இத்தடைகளை பெண்களே உடைத்து வெளியே வரவேண்டும். இதற்கு பெண்களாகிய நாமும் கைகொடுத்து காத்திடவேண்டும்

## பெண்ணை இழிவு படுத்தும் பழமொழிகள்

## யசோதா சிவதாசன்

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே.

பெண் புத்தி பின் புத்தி.

பெட்டைக் கோழி கூவி பொழுது விடியாது.

ஆடத்தெரியாத பெண் தெருக்கோணல் என்றாளாம்.

பொம்பிளை சிரிச்சா போச்சு பருத்தி ( புகையிலை ) விரிச்சா போச்சு.

மாலை சுற்றிப் பெண் பிறந்தால் மாமனுக்கு ஆகாது.

மருமகளுக்கு மாமியார் பிசாசு; மாமியாருக்கு மருமகள் பிசாசு.

மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பாதே.

மாமியார் செத்து மருமகள் அழுகிறது போல.

மகள் பிறக்கும் முன் பூட்டிக்கோ, மருமகள் வருவதற்கு முன் சாப்பிட்டுக்கோ.

மாமியார் இல்லாத மருமகள் உத்தமி, மருமகள் இல்லாத மாமியார் குணவதி.

அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாளாம்.

கைம் பெண்டாட்டி பெற்ற கழிசடை.

வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி, பொட்டு ஏண்டி, மஞ்சள் குளி ஏண்டி.

பெண்டுகள் இருந்த இடம் சண்டைகள் பெருத்திடும்.

பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரையில் தான்.

பெண் புத்தி கேட்கிறவன் பேய்.

பொன்னையும் புடவையையும் நீக்கிடில் பெண் மலக் கூடு.

பெண் என்றாலே பேயும் இரங்கும்.

ஒய்யாரக் கொண்டையாம் தலைக்குள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்.



# அமைப்பு நடாத்திய மகளிர் தின விழா புகைப்படங்கள்



2018



2019



2020




2021

இலண்டன் தமிழ் பெண்கள் அமைப்பு
London Tamil Women Organization
Email: ltwouk@gmail.com